**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.06/2026**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மாரியப்பன் | தொழில் | : வங்கி கிளை மேலாளர் |
| தகப்பனார் பெயர் | : கிருஷ்ணன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 47 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 20.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் பாரத ஸ்டேட் பேங்க் கிளை (09588), அதன் தற்போதைய முதன்மை மேலாளராக பணிபுரியும் கிருஷ்ணன் அவர்களின் மகன் சுமார் 47 வயதுள்ள மாரியப்பன் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி வங்கியின் மேலாளர் ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 12.10.2020 | பிரதிவாதி தாக்கல் செய்த தனிநபர் கடன் விண்ணப்பம் – அசல் | வா.சா.ஆ.1 |

| | | | |
|---|---|---|---|
| 02 | 12.10.2020 | பிரதிவாதி வாதியின் வங்கிக்கு எழுதிக் கொடுத்த தனிநபர் கடனுக்கான ஒப்பந்தம் – அசல் | வா.சா.ஆ.2 |
| 03 | 12.10.2020 | பிரதிவாதி வாதியின் வங்கிக்கு எழுதிக் கொடுத்த தனி நபர் கடனுக்கான Arrangement Letter – அசல் | வா.சா.ஆ.3 |
| 04 | 12.10.2020 | பிரதிவாதி வாதியின் வங்கிக்கு எழுதிக் கொடுத்த தனிநபர் கடனுக்கான Irrevocable Standing Instruction – அசல் | வா.சா.ஆ.4 |
| 05 | 01.12.2023 | பிரதிவாதி வாதியின் வங்கிக்கு எழுதிக் கொடுத்த உயிர்ப்பு கடிதம் – அசல் | வா.சா.ஆ.5 |
| 06 | 05.01.2026 | வங்கி கணக்கு விபரப் பட்டியல் – உண்மை நகல் | வா.சா.ஆ.6 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.20 18:05:40 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்